செ.வெ.எண். 42 நாள் - 16.07.2020

**2020 சுந்திரதின விழாவையொட்டி பெண்களுக்காக சிறந்த சேவை புரிந்தவர்களுக்கான சிறந்த சமூக சேவகர்களுக்கான விருது வழங்கப்படவுள்ளது - விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன**

**மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ஜெ.இன்னசென்ட் திவ்யா இ.ஆ.ப., அவர்கள் தகவல்**

இதுகுறித்து மாவட்ட ஆட்சியர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவித்துள்ளதாவது,

"பெண்களுக்காக சிறந்த சேவை புரிந்தவர்களுக்கான சிறந்த சமூக சேவர்களுக்கான சுதந்திர தின விழா விருதினை பெற கீழ்க்கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு தகுதி வாய்ந்தவர்கள் விண்ணப்பிக்கலாம்.

1. தமிழ்நாட்டை பிறப்பிடமாக கொண்டவர், 18 வயதிற்கு மேற்பட்டவராக இருத்தல் வேண்டும்.
2. குறைந்த பட்சம் 5 ஆண்டுகள் சமூக நலன் சார்ந்த நடவடிக்கைகள் பெண் குலத்திற்கு பெருமை சேர்க்கும் வகையிலான நடவடிக்கை மொழி, இனம், பண்பாடு, கலை, அறிவியல், நிர்வாகம் போன்ற துறைகளில் மேன்மையாக பணிபுரிந்து, மகளிர் நலனுக்கு தொண்டாற்றும் வகையில் தொடர்ந்து பணியாற்றும் சமூகநல சேவகர் மற்றும் சமூக சேவை நிறுவனங்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.
3. சமூக சேவை நிறுவனம் அரசு அங்கீகாரம் பெற்ற நிறுவனமாகவும் இருத்தல் வேண்டும்.

மேற்கண்ட தகுதிகளுடன் உள்ள சேவை நிறுவனங்கள் மற்றும் பெண்களுக்காக சிறந்த சேவகர்களுக்கான விண்ணப்பங்களை 20.07.2020க்குள் கீழ்க்கண்ட அலுவலத்தை நேரில் அணுகுமாறு செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**அலுவலக முகவரி**

மாவட்ட சமூகநல அலுவலகம்,<br>
மாவட்ட ஆட்சியர் கூடுதல் வளாகம்,<br>
பிங்கர்போஸ்ட், உதகை -643006<br>
நீலகிரி மாவட்டம்.

வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், நீலகிரி மாவட்டம்